



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | சனவரி 13, 2022 | புரட்சி 20 | முழக்கம் 46 | விலை: ரூ.3.00


## திரிபு வாதங்களுக்கு ஆணித்தர மறுப்பு

# பெரியார் இஸ்லாமியர்களை எதிர்த்தாரா?

கடந்த சில மாதங்களாக பெரியாரை இஸ்லாமியருக்கு எதிரானவராக சித்தரிக்கும் ஒரு பரப்புரையில், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப் பாளர் சீமான் இறங்கியிருக்கிறார். தமிழ்நாட்டில் ‘அறிவு ஜீவி’யாக அறியப்படும் ஒருவர், 25 ஆண்டுகளுக்கு முன்பே இப்படி பெரியாருக்கு எதிரான ஒரு இயக்கத்தைத் தொடங்கும் முயற்சியில் இறங்கி, பிறகு தோல்வி யடைந்து தனது குரலை மாற்றிக் கொண்டார்.

வேடிக்கை என்னவென்றால் அண்மையில்தான் சீமான் இஸ்லாமியர்களுக்கு ‘நீலிக் கண்ணீர்’ வடிக்கிறார். பெரியார் பேசிய ‘திராவிடர்’ என்ற கோட்பாட்டுக்கு அடிப்படையே பார்ப்பனரால் வஞ்சிக்கப்பட்ட சூத்திரர், ஆதி சூத்திரர், இஸ்லாமியர், கிறிஸ்தவர்களை ஒரே அணியாக அடையாளப்படுத்தி பார்ப்பனர்களை தனிமைப்படுத்துவதுதான். சீமான் பேசும் ‘தமிழர்’ என்ற அடையாளத்துக்குள் தமிழ் பேசும் பார்ப்பனர்களும் நாங்களும் தமிழர் என்று ஊடுறுவுகிறார்கள். பார்ப்பன வர்ணாஸ்ரமக் கொடுமையினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுக்கும் சுயமரியாதை வர்ணாஸ்ரம எதிர்ப்புப் போரில் ‘பிராமணர்’களும் ஊடுறுவி விட்டால் போராட்டத்தின் நோக்கமே சிதைந்து ஒழிக்கப்படும் என்பதால் பெரியார் திராவிடர் அடையாளத்தைத் தேர்வு செய்தார். தமிழ் பார்ப்பனர்களை உயர்த்திப் பேசும் சீமான் அவர்களும், ‘தமிழர்களே’ என்று பேசி வரும் சீமான், திராவிடமே சீரழித்தது என்று மேடைதோறும் முழங்கும் சீமான், தமிழர்களுக்கான அடையாளத்தை சைவத்துக்குள் தேடினார்.

ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்கள், கன்னடர், தெலுங்கு பேசினால்கூட அவர்களை ‘தமிழர்’ எதிரிகளின் பட்டியலில் வைத்தார். முருகனே தமிழ்க் கடவுள் என்று சிலை வழிபாட்டையும் சைவத்தையும் தமிழர் அடையாளமாக்கி அவர்களுக்கான தேசம் இது என்று கூறி இஸ்லாமியர், கிறிஸ்தவர்களை கடவுள் மறுப்பாளர்களை தமிழர்கள் பட்டியலி லிருந்து விலக்கி வைத்தார். இவர்தான் இப்போது இஸ்லாமியர்களுக்கு கண்ணீர் விடுகிறார். ஏன்? பெரியாரை எதிர்ப்பதற்கான ஒரு ஆயுதமாக்க வேண்டும் என்பது ஒன்று. தி.மு.கவுக்குக் கிடைத் திருக்கும் இஸ்லாமிய வாக்குகளை பிரித்தெடுத்து விட்டால், தி.மு.க. பலவீனமாகிவிடலாம் என்று பா.ஜ.க.வுக்கு மறைமுகமாக உதவிடும் பா.ஜ.க. செயல் திட்டமே இதற்குப் பின்னணியில் இருக்கக் கூடும்.

ஒவைசி என்ற இஸ்லாமியத் தலைவர் மூன்றாம் அணி ஒன்றை உருவாக்கி, பா.ஜ.க.வுக்கு எதிரான வாக்குகளைப் பிரித்து, பல மாநிலங்களில் பா.ஜ.க.வின் வெற்றிக்கு மறைமுகமாக உதவினார். அரித்துவாரில் இரண்டு இலட்சம் இஸ்லாமியர்களை படுகொலை செய்ய வேண்டும் என்று பேசிய தியாகி என்பவர், உ.பி. ஷியா முஸ்லிம் வக்பு வாரிய தலைவராக இருந்த ஒரு முஸ்லீம் ஆவார். ஒரு மாதத்துக்கு முன் இந்துவாக மதம் மாறியவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் மீது தான் இப்போது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் குறுக்கு வழியில் அதிகாரத்தைப் பிடிக்கும் சூழ்ச்சித் திட்டங்களில் ஒவ்வொன்றாக தோல்வி கண்டது ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி அதிகாரம். அ.இ.அ.தி.மு.க.வை இரண்டாக உடைத்தார்கள்; ஒரு பிரிவை தங்கள் ஆதரவு அணியாக்கினார்கள்; பிறகு இரு பிரிவையும் சேர்த்தார்கள்; பிறகு ரஜினியை களமிறக்க முயன்றார்கள்; அனைத்தும் தோல்வியில் முடிந்த நிலையில் இப்போது இஸ்லாமிய வாக்குகளை தி.மு.க.விலிருந்து பிரித்தெடுக்க “சீமான்களை”ப் பயன்படுத்துகிறார்கள் என்ற சந்தேகத்தையே அவரது திடீர் இஸ்லாமிய ஆதரவுக் குரல் எழுப்புகிறது.

பெரியார் எந்த மதத்தையும் ஏற்றுக் கொண்ட தலைவர் அல்ல. நபிகள் நாயகம் விழாக்களில் பல முறை இஸ்லாமியர்கள் அழைப்பையேற்று பேசியபோதுகூட அம்மதத்தின் மூடநம்பிக்கைகளை விமர்சனம் செய்து விட்டு இஸ்லாமியர்களை இனத்தின் அடிப்படையில் அரவணைத்தார்; ஆதரித்தார். அவர்களை திராவிடர் என்ற இனத்தின் அடிப்படையில் பார்த்தாரே தவிர, மதத்தின் அடிப்படையில் அல்ல.

> “முஸ்லீம்கள் யார்? இவர்கள் தமிழ்நாட்டில் ஆரியர் ஆதிக்கம் தலைதூக்க ஆரம்பித்ததும் அதன் கட்டுப்பாடுகளுக்கு இழிதன்மைக்கு இடம் கொடுக்க விரும்பாமல் மதம் மாறிய திராவிடர்கள் தாம் இந்நாட்டு முஸ்லீம்கள் பெரும்பாலோர் ஆவார்கள். இந்நாட்டு கிறிஸ்துவர்களும், அவர்கள் இந்துவாயிருக்கும் போது இப்படித் தம் சமுதாய இழிவை நீக்கிக் கொள்ளவும், கிறிஸ்துவர்களுக்கென்று வழங்கப்பட்ட சில தனியான சலுகைகளைப் பெறவும் மதமாற்றம் செய்து கொண்ட திராவிடர்கள் தாமே யொழிய, இந்நாட்டுக் கிறிஸ்தவர் யாரும் ஜெருசலத்திலிருந்து வந்து குடியேறியவர் களின் சந்ததியார்களலல்லர்.”
>
> - (‘விடுதலை’ 5.10.1948)

- இதுவே பெரியாரின் இஸ்லாமியர் கிறிஸ்தவர்கள் பற்றிய கருத்து.

1930இல் அம்பேத்கர் தீண்டாமைக்கு எதிராக இஸ்லாத்திற்கு மாற நினைத்தபோது பெரியார், “ஒரு இலட்சம் பேரோடு இஸ்லாமுக்கு மாறுங்கள்” என்று கூறினார். “இழிவு நீங்க இஸ்லாம் என்கிற மந்திரம் தான் நம்மை மனிதராக்க முடியும்” என்றார். (நூல்: ‘இன இழிவு நீங்க இஸ்லாமே நன்மருந்து’ - 1947)

1952 ஆம் ஆண்டு இராஜகோபாலாச்சாரி தமிழக முதல்வரானார். பதவியைப் பயன்படுத்தி ‘மனு சாஸ்திர’ பார்ப்பனியத்தைத் திணிக்க முயன்றார். அவருக்கு முஸ்லீம் லீக் ஆதரவு தெரிவிக்க முன்வந்த போது அதைக் கடுமையாக விமர்சித்து பெரியார் 1962ஆம் ஆண்டு எழுதிய ஒரு கருத்தை எடுத்து வைத்துக் கொண்டு, பெரியாரை இஸ்லாமியருக்கு எதிராக சீமான் எவரோ சொல்லிக் கொடுத்ததைப் பேசிக் கொண்டிருக்கிறார்.

தமிழ்நட்டில் இராஜகோபாலாச்சாரி முதலமைச்சராக இருந்தபோது பச்சை வர்ணாஸ்ரம ஆட்சியை நடத்தி பள்ளிகளை மூடி அதிகாரத்தை பார்ப்பன மயமாக்கி இந்தியைத் திணித்து அவனவன், அப்பன் தொழிலை ஆரம்பப் பள்ளி படிக்கும் மாணவர்களையே செய்ய வைக்கும் குலக்கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்திய நேரத்தில் பெரியார் வெகுண்டு எழுந்தார். காங்கிரஸ் கட்சி பார்ப்பனரல்லாத தலைவர்களே சகித்துக் கொள்ள முடியாத நிலையில் அவரது ஆட்சி நடந்தது. பெரியார் போராட்டத்தினால் மக்கள் எதிர்ப்பைச் சந்திக்க முடியாத நிலையில் இராஜகோபாலாச்சாரி, பதவி விலக நேரிட்டது. அப்போது பெரியார் மற்றும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் வரதராஜுலு

(2ஆம் பக்கம்)

## நிதியமைச்சரின் வரவேற்கத்தக்க சட்டம் : இனி அரசு தேர்வாணையம் வழியாகவே அனைத்துப் பணி நியமனங்களும்!

குரூப் 4, வி.ஏ.ஓ போன்ற நான்காம் நிலை ஊழியர்கள் கிராம அதிகாரிகள் தேர்வுக்கு, பங்குபெறும் மாணவர்களுக்கு ஆங்கிலத் தேர்வு மிகப்பெரும் தடையாக இருந்து வருகிறது. ஆங்கிலத் தேர்வில் தேர்ச்சி பெற முடியாமல் கிராமங்களிலிருந்து வரக்கூடிய இளைஞர்கள் பின்னடைவை சந்திக்கின்ற சூழ்நிலையில் தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறது. வி.ஏ.ஓ குரூப் 4 தேர்வுகளுக்கு ஆங்கிலத் தேர்வு இரத்து செய்யப்பட்டது உண்மையிலேயே சமூக நீதிக்கு வழங்கப்பட்ட ஒரு கொடையாகும்.

தமிழ்த் தேசிய அமைப்புகள் இந்த அறிவிப்புப் பற்றி எந்தக் கருத்தும் கூறாமல் கள்ள மவுனம் சாதிக்கின்றன.

அரசுக்கு சொந்தமான பொதுத் துறை நிறுவனங்கள், அரசுக் கழகங்கள் மற்றும் சட்ட பூர்வமான வாரியங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் வாரியங்களின் பணியிடங்கள் ஆகிய அனைத்திலும் பணி இடங்கள் தமிழ்நாடு தேர்வாணையத்தின் வழியாகவே நிரப்பப்படும் என்ற சட்டத்தை, தமிழ்நாடு நிதியமைச்சர் சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார். இதன் மூலம் பல துறைகளில் வேலை வாங்கித் தருவதாக லஞ்சம் பெறும் ஊழல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கிற முயற்சியில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டு இருக்கிறது. இது நியமனங்களில் ஊழல்களை தடுக்க உதவுவதோடு, வெளிப்படையான தேர்வு முறைக்கும் கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுக்கும் மிகவும் உதவிகரமாக இந்த ஆணை அமையும். தகுதி இருந்தால் நிச்சயம் தமிழ்நாடு அரசின் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை நிதியமைச்சரின் இந்த சட்டம் உருவாக்கியிருக்கிறது.

முன்னாள் அமைச்சர் இராஜேந்திர பாலாஜி, ஆவின் நிறுவனத்தில் வேலை வாங்கி தருவதாக கூறி 3.10 கோடி ரூபாய் மோசடி செய்த வழக்கில் தற்போது கைது செய்யப்பட்டிருக்கிறார். பல இடைத்தரகர்கள் அரசுத் துறைகளில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி, பல கோடி ரூபாய் மோசடி செய்கின்ற செய்திகள் அவ்வப்போது வந்து கொண்டே இருக்கின்றன. இவை அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக இந்த அறிவிப்பு இருக்கிறது.

ஊழல் ஒழிப்பு என்பது அவ்வளவு ஒரு சாதாரண பிரச்சனை அல்ல. முற்றிலுமாக ஊழலை ஒழிப்பதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகாலம் ஆகும் என்பதை நாம் நிச்சயமாகக் கூறிவிட முடியாது. அது இந்த சமூகத்தில் புரையோடிப்போயுள்ள ஒரு பண்பாகும். ஜாதி அமைப்பிலிருந்தே ஊழல் என்ற அமைப்பு தோன்றி விடுகிறது. கடவுளுக்குக் கூட இலஞ்சம் கொடுத்து தான் பிரார்த்தனை செய்ய முடியும் என்ற சமூக நிலையை பக்தியின் பெயரால் உருவாக்குகிறோம். எனவே ஊழலை முற்றிலுமாக ஒழிப்பது என்பது இயலாத காரியம் என்று சொன்னாலும், அதற்கான முயற்சிகளை ஒரு ஆட்சி தொடங்கும் போது நாம் நிச்சயமாக வரவேற்கத் தான் வேண்டும். அந்த வகையில் டி.என்.பி.எஸ். சி இன் சமூக நீதி அறிவிப்பும், தமிழ்நாடு நிதி அமைச்சரின் சட்டமன்ற அறிவிப்பும் வரவேற்கப்பட வேண்டும்.

**‘புரட்சிப் பெரியார் முழக்க’ வாசகர்களுக்கு தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் வாழ்த்துக்கள்!**

தலையங்கம்

## சித்தராமய்யாவின் ஜாதி எதிர்ப்புக் குரல்

‘சுயமரியாதை; ஜாதி ஒழிப்பு’ என்ற சொல்லாடல்கள் பல்வேறு திக்குகளிலிருந்து கேட்கத் தொடங்கி இருக்கின்றன. ‘நாட்டில் ஒவ்வொரு மனிதருக்கும் சுயமரியாதை முக்கியமானது; ஜாதிகள் இருக்கும் வரை நாம் மனிதராக வாழ முடியாது’ என்று கருநாடக முன்னாள் முதல்வர் சித்தராமையா, பெங்களூரில் நூல் வெளியீட்டு நிகழ்வு ஒன்றில் பேசியிருக்கிறார். ‘சவிதா’ என்ற சமூகத்தின் சார்பில் ‘நான் சுயமரியாதைக்காரன்’ என்ற நூல் வெளியீட்டு விழாவில் சித்தராமய்யா இவ்வாறு பேசியிருக்கிறார். 12ஆம் நூற்றாண்டில் கருநாடகத்தில் ஜாதி எதிர்ப்புக்காகப் போராடிய பசவண்ணாவை அவர் நினைவு கூர்ந்திருக்கிறார்.

“நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்யும்போது, எந்த ஜாதியைச் சார்ந்தவர் இரத்தம் கொடுத்தார் என்று நாம் கேட்பது இல்லை. உயிர் பிழைத்து விட்டால் மீண்டும் ஜாதியைப் பேசத் தொடங்கி விடுகிறோம். ஜாதிகள் இருக்கும் வரை நாம் மனிதராக வாழ முடியாது. செய்யும் தொழிலையே ஜாதியாக மாற்றி மேல் ஜாதி – கீழ் ஜாதி என்று பிரிவை வைத்துள்ளனர். மூட நம்பிக்கைகளை விதைப்பவர்களை புறக்கணிக்கா விட்டால் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. கருநாடகத்தில் 78 சதவீதம் பேர் கல்வி அறிவு பெற்றிருந்தாலும் ஜாதியைவிட மறுக்கிறார்கள். படித்தவர்களால் தான் அதிக ஏமாற்று வேலைகள் நடக்கின்றன. சுயமரியாதைக்காரர் களாக வாழ்வதே சிறந்த வாழ்க்கை” என்று பெரியார் குரலை ஒலித்திருக்கிறார்.

ஜாதி ஒழிப்புப் பற்றி அரசியல் தலைவர்கள் பேசுவது வெகு அபூர்வமாகிவிட்டது. தீண்டாமை எதிர்ப்பு, இடஒதுக்கீடு பற்றி பேசக் கூடிய தலைவர்கள்கூட ஜாதி எதிர்ப்பைப் பேசுவது இல்லை. காரணம் வாக்கு வங்கி ‘ஜனநாயக’ அரசியலுக்கு ஜாதி தேவையும் அவசியமுமாக இருக்கிறது என்பதுதான்.

“நமக்கு ஜனநாயகம் சுதந்திரம் வந்துவிட்டது என்று கூறுகிறார்களே! அன்று சூத்திரனாக இருந்தவன் இன்றைக்கும் சூத்திரனாகத்தான் இருக்கிறான்” என்றார் பெரியார். (‘விடுதலை’ 29.7.1969)

தீண்டாமைக்கு எதிராக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வர முடித்திருக்கிறதே தவிர, தீண்டாமைக்கு அடிப்படையான வேராக இருவரும் ‘ஜாதி எதிர்ப்பு’ சட்டம் கொண்டு வருவது பற்றி கனவில்கூட சிந்திக்க முடியாத நிலையில் தானே இந்த நாடு இருக்கிறது?

ஜாதிக்குள்ளே திருமணம் என்பதே ‘சமூகக் கவுரவம்’ என்ற சிந்தனை பொதுப் புத்தியில் திணிக்கப்பட்டு விட்டது. பெற்ற பிள்ளைகளையே ஜாதி கவுரவத்துக்காக கொலை செய்யும் அளவுக்கு மனிதர்களை ஜாதி மிருகங்களாக்கி வைத்திருக்கிறது.

ஒரு கட்டத்தில் ‘இலைமறை; காய்மறையாக’ இருந்த ஜாதி, இப்போது வெளிப்படையாகப் பேசப்படுகிறது. ‘தமிழ்த் திருமண மய்யம்’ என்ற பெயரால் ‘வரன் தேடித் தரும்’ வணிக நிறுவனங்கள், ஜாதிகளுக்குள் ‘வரன் தேடுவதை’ தொலைக்காட்சிகளில் விளம்பரங்களாக வெளியிடும் நிலைக்கு நாடு பின்னடைவுக்குப் போய் விட்டது. தமிழ் நாட்டிலேயே இந்த நிலை என்றால் பிற மாநிலங்கள் பற்றிப் பேசவே தேவையில்லை. ஜாதிச் சங்கங்கள், ஜாதி உணர்வை வெறியாக மாற்றுவதற்கு துடிக்கின்றன. அதை அரசியலுக்கு தங்களின் சொந்த செல்வாக்கு வளர்ச்சிக்கு மடைமாற்றுகின்றன.

சமூக நீதி என்ற பேசப்படும் இடஒதுக்கீட்டின் நோக்கம், ஜாதிகளுக்குள் சமத்துவத்தை உருவாக்கி ஜாதி எதிர்ப்பை நோக்கி முன்னே நகர்வதற்கான கொள்கை. ஆனால் இடஒதுக்கீடும் அதன் வழியே கல்வி பெற்று அதிகாரப் பதவிகளுக்கு வந்தவர்களும் அடுத்தக்கட்ட நகர்வு நோக்கி நகர முடியாமல் ஜாதி உணர்வு தடுத்து விடுகிறது. பெற்ற கல்வி சமூக மாற்றத்துக்குப் பயன்படாமல் ‘சுயநலன்’ ஜாதி நலன் நோக்கியே சுழலச் செய்து கொண்டிருக்கிறது. இதுவே இப்போதும் பார்ப்பனியம் வீழ்த்த முடியாத சக்தியாக நிலை பெற்று நிற்பதற்குக் காரணமாக இருக்கிறது.

பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு என்ற கருத்தாக்கம், பார்ப்பனர்களின் மேலாதிக்க எதிர்ப்போடு முடிவடைவதில்லை. பார்ப்பனியக் கருத்தியலிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு அது கட்டமைத்த ஜாதிய நிறுவனங்கள், ஜாதிய சிந்தனைகள், ஜாதிய அமைப்புகளை பலவீனப்படுத்தி, அதன் செல்வாக்கை பலவீனமாக்கும் பண்பாட்டுப் புரட்சியில் கருக் கொண்டிருக்கிறது. பசவண்ணா தொடங்கிய ‘லிங்காயத்’ அமைப்பு, ஜாதி எதிர்ப்புக் கொள்கைக்கானது என்றாலும் லிங்காயத்துகளே இப்போது ஒரு ஜாதியாகிவிட்டனர்.

இதுதான் பார்ப்பனியத்தின் வெற்றி. இந்தப் பின்னணியில் சித்தராமய்யா என்ற அரசியல் தலைவர், ஜாதியை எதிர்த்துப் பேசியிருப்பதும், சுயமரியாதைத் தத்துவத்தின் நியாயங்களை வலியுறுத்தியிருப்பதும் உண்மையிலேயே பாராட்டி வரவேற்கப்பட வேண்டும்.

# அனைத்து மாநிலங்களுக்கும் தமிழக அரசு பெற்றுத் தந்த 27 சதவீத ஒதுக்கீடு

டி.ஒய். சந்திர சூட், ஏ.எஸ். போபண்ணா ஆகியோரடங்கிய உச்சநீதிமன்ற இருவர் அமர்வு கடந்த 7ஆம் தேதி ஒரு முக்கிய தீர்ப்பை வழங்கியுள்ளது. மருத்துவம், மருத்துவ உயர் பட்டப் படிப்பில், பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீடு என்பது அரசியல் சட்டப்படி செல்லும் என்பது தான் அந்தத் தீர்ப்பாகும்.

அகில இந்திய கோட்டாவில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடங்களை நிரப்ப முடியாது என்று மறுத்து வந்தது மோடி தலைமையிலான ஒன்றிய ஆட்சி. திமுக ஆட்சிக்கு வருவதற்கு முன்பே உச்சநீதிமன்றத்திலே இதற்கு வழக்கு தொடர்ந்தது. உச்சநீதிமன்றம் 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற தீர்ப்பை வழங்கியது. கடந்த ஆண்டு மறுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோருக்கான 4000 இடங்கள் அகில இந்திய அளவில் அனைத்து மாநிலங்களுக்கும் கிடைத்துள்ளது. இது திமுக ஆட்சி - அனைத்து மாநிலங்களுக்கும் பெற்றுத் தந்த சமூக நீதியாகும்.

உயர்ஜாதிகளுக்கான 10% இட ஒதுக்கீடு அவசர அவசரமாக ஜனவரி 2019, 14ஆம் தேதி கொண்டு வந்து மூன்றே நாட்களில் 17ஆம் தேதி அதற்கான அரசு அறிவிப்பையும் வெளியிட்டு, அந்தப் பிரிவின் கீழ் வருபவர்களுக்கு ஆண்டு வருமானம் 8 இலட்ச ரூபாய் என்றும் ஒன்றிய அரசு அறிவித்தது. உச்ச நீதிமன்றம் இதில் பல கேள்விகளை கேட்டது. மூன்றே நாட்களில் வருமான வரம்பை எப்படி முடிவு செய்தீர்கள்? இதற்கு ஒன்றிய அரசு ஒரு பதிலை தந்தது. முதலில் தாக்கல் செய்த மனுவில் ஓபிசிக்கு நிர்ணயித்த அதே 8 இலட்ச ரூபாயை அப்படியே எடுத்துக்கொண்டோம் என கூறியது. உச்சநீதிமன்றம் இதை ஏற்கவில்லை. பின்னர் அஜய் பூஷன் என்பவர் தலைமையில் (ஒன்றிய நிதியமைச்சக அதிகாரி) ஒரு நிபுணர் கமிட்டியை நியமித்து நாங்கள் விரிவாக ஆய்வு செய்தோம், விரிவாக ஆய்வு செய்ததற்குப் பிறகே இந்த வருமான வரம்பிற்கு வந்தோம் என்று ஒரு அறிக்கையை சமர்ப்பித்தனர்.

நீதிபதிகள், முதலில் ஓபிசி பிரிவினருக்கு நியமித்ததை அப்படியே ஏற்றுக் கொண்டோம் என்று கூறியவர்கள், இப்போது ஏன் மாற்றிப் பேசுகிறீர்கள் ஏன் இந்த முரண்பாடு என்ற கேள்விகளெல்லாம் கேட்டு அவர்கள் திருப்தி அடையாத நிலையில் இந்த வழக்கை தள்ளி வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நடப்பு ஆண்டில் நீட் கவுன்சிலிங் உடனடியாக நடத்தப்பட வேண்டும். 10 சதவீத பிரிவின் கீழ் வருபவர்களுக்கு எந்தப் பாதிப்பும் வந்து விடக்கூடாது என்ற காரணத்தைக் காட்டி எப்படியாவது விரைந்து முடிக்க வேண்டும் என்று துடிப்பு காட்டியது ஒன்றிய அரசு. 27 சதவீத ஓபிசி ஒதுக்கீட்டைவிட 10 சதவீத முன்னேறிய ஜாதி ஒதுக்கீடு தான் முக்கியம். அதன் காரணமாக உச்சநீதிமன்றம் தற்போது, இந்த ஆண்டிற்கு மட்டும் 8 இலட்சம் வருமான வரம்பை வைத்து நிரப்பிக் கொள்ளுங்கள் ஆனால் இது இறுதித் தீர்ப்பு அல்ல மார்ச் மாதம் வழக்கு விசாரணைக்கு வரும் என்ற நிபந்தனையோடு இப்போது இந்த 8 இலட்ச வருமான வரம்பிற்கு அனுமதி அளித்திருக்கிறது உச்சநீதிமன்றம்.

இந்தப் பின்னணியில் தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி எடுத்த முயற்சிகளால் 27% இட ஒதுக்கீடு கிடைத்தது வெற்றி என்று கூறினாலும், அரசியல் சட்டத்திற்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட முன்னேறிய ஜாதியினருக்காக தனி இட ஒதுக்கீடு என்பது சமூக நீதி கொள்கைக்கு ஒரு பின்னடைவு என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

(நாயுடு) போன்றவர்கள் காமராசரை வலியுறுத்தி முதல்வர் பதவியை ஏற்கச் செய்து, இராஜாஜியின் பார்ப்பனிய வர்ணாஸ்ரமத் திட்டங்களை ஒழிக்கச் செய்தனர். “சூத்திர” மக்களுக்கான ஆட்சியை காமராசர் நடத்தத் தொடங்கினார். கொதித்துப் போன இராஜ கோபலாச்சாரி, 1959இல் ‘சுதந்திரா’ கட்சியைத் தொடங்கி காமராசரை வீழ்த்த வியூகம் வகுத்தார்.

> 1957இல், 15 சட்டமன்ற தொகுதிகளில் இடம் பெற்ற தி.மு.க. அடுத்து அதிகாரத்துக்கு வர காங்கிரசை எதிர்க்க வேண்டிய நிலையில் இராஜாஜி ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தது. பெரியார் அதைக் கடுமையாக விமர்சித்தார். “இப்போது ஆச்சாரியார் ஆதரவு நிலை எடுத்தாலும், எதிர்காலத்தில் பார்ப்பன எதிர்ப்பு பேசாமல் தமிழ்நாட்டில் நீங்கள் உலவ முடியாது. அப்போது என்னிடம் ஆதரவு கேட்க வரக் கூடும்; நானும்கூட ஆதரவுத் தரலாம்; நினைவில் கொள்ளுங்கள்” என்று எழுதினார். (‘விடுதலை’ 1.1.1962)
>
> ஆச்சாரியார் சுதந்திரா கட்சியைத் தொடங்கியபோதே, “பார்ப்பன சமுதாயம் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்; அவரை ஆதரிக்கக் கூடாது” என்று பார்ப்பனர்களுக்கே காமராசர் ஆட்சியைக் காக்க வேண்டுகோள் விடுத்தார். (‘விடுதலை’ 1.1.1962)


அப்போதுதான் முஸ்லிம் லீக், ஆச்சாரியாரை ஆதரிக்க முன் வந்தபோது, “பார்ப்பானுக்கு பயந்து முஸ்லீம்களுக்கு அதிக இடம் கொடுத்து வந்தோம்; அதன் பலனை இன்று அனுபவிக்கிறோம்; இது சாணியை மிதிக்க அசிங்கப்பட்டு, மலத்தின் மீது காலை வைக்க நேர்ந்த **பழமொழியாக** முடிந்தது.

> “ஏன் இப்படிச் சொல்கின்றேன் என்றால், பார்ப்பான் துரோகம் செய்ய அவனுக்குக் காரணம் உண்டு. என்னவென்றால், அவனது பொய், பித்தலாட்ட உயர் வாழ்வு சரிந்து விழுகிறது. முஸ்லிம் துரோகம் செய்யக் காரணம் என்ன ? முஸ்லிம்கள் அதை வெளியிட்டு மக்களை திருப்தி செய்ய வேண்டும். அப்போது தான் அவர்கள் துரோகக் கூட்டத்திலிருந்து விலக இச்சைப்பட்டவர்கள் ஆவார்கள்” என்று குறிப்பிட்டார்”. (விடுதலை 06.03.1962)

- என்று எழுதினார்.

முஸ்லீம் லீக், தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற நோக்கமே அவரது இந்த வேண்டுகோளில் அடங்கியிருப்பதைப் புரிந்து கொள்ள முடியும். முஸ்லீம் லீக் என்ற அரசியல் கட்சியினர் ஒரு தவறான அரசியல் நிலைப்பாட்டைக் கண்டித்து எழுதிய வரிகளை இஸ்லாமிய சமுதாயத்துக்கே எதிராக சித்தரிப்பது அப்பட்டமான திரிபுவாதம்; உள்நோக்கம்; வஞ்சகம் அல்லவா?

## தமிழர் விழா



தமிழர் விழா (பண்டிகை) என்பதாக நான் எதைச் சொல்ல முடியும்? ஏதாவது ஒன்று வேண்டுமே! அதை நாம் கற்பிப்பது என்பதும், எளிதில் ஆகக் கூடியது அல்லவே என்று கருதிப் பொங்கல் பண்டிகை என்பதைத் தமிழன் விழாவாகக் கொண்டாடலாம் என்று முப்பது ஆண்டுகளுக்கு முன் நான் கூறினேன். மற்றும் யாராவது கூறியும் இருக்கலாம். இந்தப் பண்டிகையும் அறுவடைத் திருவிழா (Havest Festival) என்ற கருத்தில்தானேயொழிய சங்கராந்திப் பண்டிகை, போகிப் பண்டிகை, இந்திரவிழா என்ற சொல்லப்படும் கருத்தில் அல்ல. இந்தப் பொங்கல் பண்டிகையைத் தமிழர் எல்லோரும் கொண்டாட வேண்டும்”.

**‘விடுதலை’** 30.01.1959

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேச்சு (2)

# பெண்கள் இடஒதுக்கீடு; திருமண வயது உயர்வு பிரச்சினைகளில் கழகம் பெரியாரியப் பார்வையில் எடுத்த தனித்துவ நிலைப்பாடுகள்

*‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டின் தலையங்கத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வில் டிசம். 24, 2021 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய தலைமை உரையின் கடந்த இதழ் தொடர்ச்சி.*

அனைத்து மதத்தினருக்குமான பொதுவான பண்டிகையாக இருந்தும்கூட அரசு அலுவலகங்களில் கொண்டாட வேண்டாம் என்ற கேரளா அரசு ஆணையை வரவேற்று எழுதுகிற போது பல செய்திகள் ‘புரட்சிப் பெரியார் முழக்க’த் தலையங்கத்தில் பகிரப்படுகிறது. குஜராத்தில் ஒரு வழக்கிற்காக 2006இல் ஒரு தீர்ப்பு வருகிறது. பொது இடங்களில் இருக்கின்ற கோவில்களை பற்றிய தீர்ப்பு அது. இதுவரை கட்டியிருக்கும் கோவில்கள் இருக்கட்டும் இனிமேல் புதிய கோவில்கள் கட்டக் கூடாது. திரும்பவும் அதற்கு 2013இல் ஒரு தீர்ப்பு, 2018இல் ஒரு தீர்ப்பு என்று தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது.

ஒரு கட்டத்தில் கோபால கவுடா என்று ஒரு உச்சநீதிமன்ற நீதிபதி கொஞ்சம் முற்போக்காக சிந்திக்கின்ற ஒரு நீதிபதியாக இருந்தார். அவரோடு அருண் மிஸ்ரா இருவரும் இணைந்து கூறினார்கள், ‘இனிமேல் பொது இடங்களில் கோவில் கட்டுகிற பிரச்சனை வந்தால் தலைமைச் செயலாளரை உச்சநீதிமன்றத்திற்கு அழைத்து விசாரிப்போம்’ என்று அந்தத் தீர்ப்பில் கூறினார்கள். அதுகுறித்து விரிவான ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது.

இவையெல்லாம் எதற்கு சொல்கிறேன் என்றால் இவற்றை திருப்பிப் படிக்கின்ற போது பல செய்திகள் நம கவனத்திற்கு வருகிறது. அதுமட்டுமல்லாமல் நாம் பார்த்த தனித்துவமான பார்வையை உணரமுடிகிறது. எனது முன்னுரையில்கூட அதை குறிப்பிட்டிருந்தேன். ஒவ்வொருவரும் பார்க்கின்ற பார்வைக்கும் நாம் பார்க்கின்ற பார்வைக்கும் வேறுபாடுகள் பல இருந்திருக்கிறது. தற்போது கூட பெண்களுக்கான திருமண வயது 21 என்பதை எதிர்ப்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால் நாம் வரவேற்கிறோம்.

பெரியார் காதலைப் பற்றி கூறுகிறபோது சொல்வார், “குழந்தை தூங்கினால் காலை ஆட்டுமே என்று தாய் சொன்னதற்கு, தூங்கிவிட்டதாக நம்பச் செய்வதற்கு குழந்தை காலை ஆட்டுவதைப் போலத் தான், காதலர்களின் செயல்களும் இருக்கிறது. தெய்வீக காதல் என்பதைக் காட்டிக் கொள்வதற்கு பல விதமான செயல்களை செய்து கொண்டு உள்ளார்கள். அறிவார்ந்த காதல் வரட்டும் அந்த திருமணங்களை வரவேற்போம்” என்று கூறுவார்.

பெண்கள் 12ஆம் வகுப்பு முடித்தவுடன் திருமணம் செய்யலாம் என்பதுதான் 18 வயது, திருமண வயது என்று இருக்கிறது. நாம் திருமண வயது வரம்பு உயரட்டும் என்று சொல்கிறோம். மற்றவர்கள் எதிர்க்கிறார்கள். நமக்கு ஒரு பார்வை அவர்களுக்கு ஒரு பார்வை. பெண்களுக்கான 33 விழுக்காடு குறித்து விவாதம் வந்தபோது பல பேர் அதை உள் இட ஒதுக்கீடு உடன் வரவேண்டும் என்று பேசினார்கள். திராவிடர் கழகத் தலைவர் வீரமணி கூட அப்படித் தான் கூறினார். தனி ஒதுக்கீடு என்று வருகின்ற போது பெண்கள் இட ஒதுக்கீடே கூடாது என்று நினைப்பவர்கள் வடநாட்டுத் தலைவர்கள், உள்ஒதுக்கீடு இல்லாமல் வரக் கூடாது என்று நிபந்தனை விதித்தார்கள்.

ஆனால் நாமே தான் ஒரு கட்டத்தில் பேசினோம், வி.பி.சிங் அவர்கள் மண்டல் குழுவை சட்டமாக்கிய போது நாமெல்லாம் சொன்னோம் அவர் கல்விக்கு இட ஒதுக்கீடு கொண்டு வரவில்லை, வேலை வாய்ப்பிற்கு மட்டும் கொண்டு வந்தார். வேலை வாய்ப்பிலும் கூட சில பிரிவுகளுக்கு மட்டுமே கொண்டு வந்தார். இராணுவத்துக்குக் கொண்டு வரவில்லை . அது மட்டுமில்லை உயர் ஆய்வுக்கு, உயர் மருத்துவத்திற்கு எல்லாம் இல்லை என்பதை சொல்லிவிட்டுத்தான் கொண்டு வந்தார். அப்போது நாம் கூறினோம், முதலில் வரட்டும் மற்றவை எல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று.

முதலில் இந்த வேலைக்காவது வரட்டும் என்று கூறிய நாம், இப்போது பெண்களுக்கான 33 விழுக்காடு வரட்டும் பிறகு பேசிக் கொள்ளலாம் என்று சொல்லலாமே? இப்போது எந்த சூழலிலாவது பார்ப்பனர் ஒருவர் கூட வர முடியாத அளவில் இட ஒதுக்கீடு எங்கே இருக்கிறது ? ஏதாவது இட ஒதுக்கீடு



நாம் பிற்படுத்தப்பட்டோருக்கு மட்டும் வாங்கி இருக்கிறோமா எதுவும் இல்லையே.?

பிற்படுத்தப்பட்டவர்கள் தான் அனைத்து இடத்திலும் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாக தனித் தொகுதியை தவிர மற்ற அனைத்து தொகுதிகளிலும் பிற்படுத்தப்பட்டவர்கள் தான் இருக்கிறார்கள். அல்லது பார்ப்பனரல்லாதவர்கள் இருக்கிறார்கள். ‘ஏன் எதற்கு’ என்கிற பார்வைகளை நாம் தலையங்கத்தின் வழியாக முன்வைத்தோம். உள் ஒதுக்கீடு என்ற நிபந்தனையை வலியுறுத்தினால் அதை ஒரு தடுப்பு வேலையாகத் தான் நாம் பார்க்கிறோம். முதலில் வரட்டும் பின் அடுத்த ஒரு கோரிக்கை வைப்போம் என்ற நிலையை நாம் எடுத்தோம்.

தலையங்கங்கள் என்பது நாம் எடுத்த தனித்த சில கருத்துக்களை நம் தோழர்களுக்கும், மற்றவர்களுக்கும் சில கோரிக்கைகளை நாம் வைத்துக் கொண்டே வந்து இருக்கிறோம். ஒவ்வொரு பரப்புரைப் பயணங்களையும் ஒரு தலைப்பு கொடுத்து நடத்தியிருக்கிறோம். ‘நம்புங்கள் அறிவியலை நம்பாதீர்கள் சாமியார்களை’ என்ற தலைப்பில் நடத்தி இருக்கிறோம். ‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம், இளைய தலைமுறைக்கு வேலை வேண்டும்’ என்று இட ஒதுக்கீட்டோடு இணைத்துப் பயணம் எடுத்தோம்.

அகமண முறை எதிர்ப்புப் பயணம் இப்படிப் பல பயணங்களை வருடந்தோறும் எடுத்திருக்கிறோம். அப்போது அவற்றைக் குறித்து கட்டுரைகள் பல வந்திருக்கின்றன. பல கட்டுரைகள் என்றால், பல பேர் எழுதியதாக அர்த்தமில்லை. எழுதியவர் ஒருவரே தான். விடுதலை இராசேந்திரன் தான் அப்படி அனைத்தையும் தானே செய்பவராகத் தான் அவர் இருந்திருக்கிறார். என்னால் ஒரு வரியைக் கூட ஒரு பத்தியாகத்தான் எழுத முடியும். குறைத்து, உடைத்து எழுத முடியாது. குறைத்து உடைத்து எழுதுங்கள் என்று என்னிடம் கூறுவார்.

இன்று வரை நான் எழுதினால் கூட அவர் தான் குறைத்து, உடைத்து எளிமையாக எல்லோருக்கும் புரியும் வகையில் எழுதிக் கொண்டிருக்கிறார். தடா, பொடா, மரண தண்டனை, புதிய கல்வி இப்படிப் பல புத்தகங்களை எழுதியிருக்கிறார். செய்தியை எளிமையாகப் புரிய வைக்கும் வலிமை அவரின் எழுத்துக்கு உண்டு. நாம் எழுதினோ மென்றால், அதற்கு விளக்க உரை மற்றொருவர் எழுத வேண்டும். புரிந்து கொள்ளும் வகையில் மட்டுமல்ல, நாம் எண்ணிய எண்ணத்தையும் அவரின் எழுத்து பிரதிபலிக்கும்.

விடுதலையில் அவர் எழுதுகின்ற போதிலிருந்தே பார்க்கிறேன். விடுதலைப் புலிகளின் அதிகாரப்பூர்வ செய்தியாகத் தான் விடுதலையில் வரும் செய்திகள் இருந்தன. அணுஉலைக்கு எதிரான கட்டுரைகள் தொடக்க காலங்களிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. என்னிடம் ஒருவர் கேட்டார், அப்போதே ‘விடுதலை’யில் அணுஉலையை எதிர்த்து எழுதப்பட்டிருக்கிறதே, ஏன் இப்போது ஆசிரியர் அறிவியல் என்று நியாயப்படுத்துகிறார் என்று கேட்டார். நான் கூறினேன், அந்த கட்டுரைகளை எழுதியவர் இன்னமும் எதிர்த்து எழுதிக் கொண்டுதான் இருக்கிறார். ஆனால் திராவிடர் கழகத்தில் இல்லை திராவிடர் விடுதலைக் கழகத்தில் இருக்கிறார் என்று கூறினேன்.

இப்படி சமூகத்தில் மக்களுக்கு தேவையானவற்றை இயக்கத்தின் மூலமாகவும், இயக்கத்தின் செயல்திட்டமாகவும் முன் வைக்கிறோம், அல்லது நடந்த நிகழ்வுகளின் மீது விமர்சனம் வைக்கிறோம் இவை எல்லாவற்றையும் எங்கள் பொதுச் செயலாளர் இராசேந்திரன் எழுதிய தலையங்கங்கள் தான் கூறியிருக்கிறது. பெரியார் ஒரு முறை எழுதினார், ‘இதில் ஒரு தலையங்கத்தைத் தவிர அந்த காயலாக இருந்த போதும், மீதி அனைத்துத் தலையங்கங்களையும் நான் தான் எழுதினேன்’ என்றார். அப்படி அந்த ஒன்றைக் கூட விடவில்லை இராசேந்திரன் தான் எழுதிக் கொண்டிருக்கிறார்.

சொர்க்கம் போக ரொக்கம் தேவை, இதைப் பற்றியும் கூறிவிட வேண்டும். இது கேலியாக, புனைப் பெயரில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு. வாலாசா வல்லவன் கூட குத்தூசியை குறிப்பிட்டுக் கூறினார். அவரின் எழுத்தும் தனி சுகம் தான். யேசு நாதர் கூறினார் ‘வலது கன்னத்தில் அடித்தால், இடது கன்னத்தையும் காட்டு என்று’ இதை கட்டுரை தொடங்கும் போது எழுதிவிட்டு, ‘யேசுநாதர் இடக்கை பழக்கமுள்ளவராக இருக்க வேண்டும், அல்லது பின்னாலிருந்து அடித்திருக்க வேண்டும்’ அது எப்படியோ இருக்கட்டும் என்று கூறிவிட்டு கட்டுரைக்குள் குத்தூசி குருசாமி செல்வார். ஆனால், அதை படிக்கும்போது யோசித்துக் கொண்டே இருப்போம்.

பாரதியாரின் பாடல்களைப் பற்றி குறிப்பிடும் போது, ஊர்களில் தெருக்கூத்து நடைபெறும் அதில், கோமாளியாக நடிப்பவருக்கு மாலையாக போடுவதற்கு இளைஞர்கள், சாக்லேட் காகிதம், உடைந்த முறுக்கு, உடைந்த வளையல் இப்படி பலவற்றைக் கோர்த்து மாலையாகப் போடுவார்கள் அதுபோலத்தான் பாரதியார் கவிதைகளும் என்று குத்தூசி எழுதுவார். இப்படி தனித்துவமாக எழுதியிருப்பார். பொதுச் செயலாளர் இராசேந்திரனும் அதே பாணியில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இது. கடவுள்களின் கதைகளைப் பற்றி, கடவுள்களுக்குள் நடைபெற்ற உரையாடல் என்று எழுதியிருக்கிறார்.

அட்சய திருதியைப் பற்றி எழுதும் போது, தங்கம் வாங்குவதற்கு என்று ஒரு நாள் இருக்கிறது, அதே போல கடவுள்களின் பிறந்த நாளை வைத்து நாம் ஏன் இவற்றையெல்லாம் வாங்கக் கூடாது என்று பக்தர்களுக்கு ஒரு அறிவுரையை வழங்கியிருப்பார். விநாயகன் பிறந்த அன்று - சோப்பு, இராமன் பிறந்த நாளில் - செருப்பு இப்படி அறிவுரையை வழங்கியிருப்பார்.

அதேபோல மனித உரிமை தளத்திலும் பலவற்றை எழுதியிருக்கிறார். இந்தத் தலையங்கங்கள் பழையதை நினைவூட்டும், எதிர்காலத்திற்கு வழிகாட்டும் என்பதைக் கூறி அதை படைத்த எங்கள் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனுக்கும், அதைத் தொகுத்தளித்த எங்கள் இணையதள பொறுப்பாளர் ப. விஜயகுமாருக்கும் நன்றியை கூறி விடைபெறுகிறேன்

(நிறைவு)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY
PURATCHI PERIYAR MUZHAKKAM
REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழக ஏட்டுக்கு சந்தா சேர்க்க தீவிரம்: தென்காசி–நெல்லை மாவட்ட கலந்துரையாடல்




கீழப்பாவூரில் நடைபெற்ற தென்காசி, நெல்லை (ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டம்) மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கலந்துரையாடல் கூட்டம் 02.01.2022 ஞாயிறு காலை 10.30 மணியளவில் தென்காசி மாவட்டம் கீழப்பாவூரில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடல் கூட்டத்தில் கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி தலைமை வகித்தார் நெல்லை மாவட்டத் தலைவர் பா.பால்வண்ணன் தென்காசி மாவட்டத் தலைவர் அ.மாசிலாமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் தோழர்கள் சந்திப்பு மற்றும் கலந்துரையாடல் கூட்டத்தின்நோக்கத்தை விளக்கிப் பேசினார். தோழர்கள் கழக இதழான 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வார இதழுக்கு சந்தா சேர்ப்பது குறித்தும் மாவட்டம் முழுவதும் இயக்கத்தைக் கொண்டு செல்ல பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர்.

இம்மாதம் முழுவதும் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழுக்கு சந்தா சேகரிப்பு பணியாற்றுவது என்றும் கொரானா தொற்று தற்போது பெருகி வருவதால் தொற்று குறைந்ததும் கொள்கை விளக்கத் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடத்திடவும், குடும்ப விழா நடத்திடவும் முடிவு எடுப்பது என தீர்மானிக்கப்பட்டது.

நிகழ்வில் தலைமை ஏற்ற கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி, கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் ஆகியோர் தோழர்களுக்கு இதழ் சந்தா சேர்ப்பு அவசியம் மற்றும் நிகழ்கால அரசியல் சூழலில் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழ் ஆற்றி வரும் பணி குறித்தும் விளக்கினர்.

நிகழ்வில் நெல்லை மாவட்ட செயலாளர் சி.ஆ. காசிராசன் தென்காசி மாவட்டச் செயலாளர் சு.அன்பரசு, தென்காசி மாவட்ட தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளர் ச.தமிழ்செல்வன், கீழப்பாவூர் ஒன்றிய பொறுப்பாளர்கள் ச.சுப்பையா பா.சேர்மத்துரை, கடையம் சங்கர், கபாலி பாறை சுரேஷ், சபாபதி, மாதவன், தங்கத்துரை, மனோஜ், வே.பால்ராசு மற்றும் தென்காசி மாவட்ட தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கழகத் தோழர் புதிய இல்லம்: சிற்பி ராஜன் திறந்து வைத்தார்



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சாலை அனந்தபுரம் இராமநாதன் -சத்யா ஆகியோர் கட்டிய புதிய இல்லம் திறப்பு விழா 02-01-2022 அன்று காலை 9 மணியளவில் நடைபெற்றது. நிகழ்வுக்கு தி.வி.க தலைமைக் குழு உறுப்பினர் ந.அய்யனார் தலைமை வகித்தார்.

திராவிடன் அப்துல் மாலிக் வரவேற்புரையாற்றினார், விழுப்புரம் மாவட்ட செயலாளர் பெரியார் சாக்ரட்டீஸ், கழக மாவட்ட தலைவர் பூ.ஆ.இளையரசன், விடுதலைச் சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் சேரன், விடாது கருப்பு நாத்திகன் ஆகியோர் வாழ்த்துரைக்கு பின் கழகத் தலைமைக்குழு உறுப்பினர் ந.அய்யனார் உரையாற்றினார். தொடர்ந்து, சிற்பி இராசன் இல்லத்தை திறந்து வைத்து சாமியார்களின் மோசடிகளை அம்பலப்படுத்தும் மந்திரமா? தந்திராமா? நடத்தி சிறப்புரையாற்றினார்கள் இறுதியில் இராமநாதன் நன்றி கூற நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

இல்லத்திறப்பு நிழகழ்சியையொட்டி பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கினார்கள். நிகழ்ச்சியில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி பரப்புரை செயலாளர் விஜி, எழுச்சி திராவிடர்கள் அமைப்பாளர் விஜயகுமார், அனந்தபுரம் திமுக நகர செயலாளர் டாக்டர் த.கல்யாணகுமார், விடுதலை சிறுத்தை கட்சியின் நகர செயலாளர் காத்தமுத்து மற்றும் சென்னை தோழர்கள் கிருத்திகா, அசுரன், செஞ்சி தோழர் நந்தகுமார், ஜாதிமறுப்பு திருமணம் செய்துகொண்ட பெரியாரிய தோழர் கண்டமங்கலம் பூபதி- ரூபா, பெரியபாபு சமுத்திரம் முருகையன், பாக்கம் பகுதி தோழர் இளையபெருமாள் மற்றும் உறவினர்கள் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கருத்துகளை கேட்டனர்.

நிகழ்ச்சி நிறைவுக்குப் பிறகு திராவிடன் அப்துல்மாலிக், தோழர்கள் அனைவரையும் அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்று தோழர்களுக்கு நினைவாக பிரேம் செய்யப்பட்ட பெரியார் படம் கொடுத்து மதியம் அனைவருக்கும் இறைச்சி உணவு வழங்கி சிறப்பித்தார்.

# அர்த்தனாரி வாத்தியார் நூற்றாண்டு விழா மணிமண்டபம் அடிக்கல் நாட்டு விழா



மறைந்த சேலம் மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் அர்த்தனாரி வாத்தியார் நூற்றாண்டு விழா, மணிமண்டபம் அடிக்கல் நாட்டு விழா மற்றும் 39ஆம் ஆண்டு நினைவுதின பொதுக்கூட்டம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 05.01.2022 புதன் காலை 10.00 மணியளவில், நங்கவள்ளி ஒன்றியம் பெரியசோரகையில் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி அடிக்கல் நாட்டும் நிகழ்சியில் பங்கேற்று நினைவு தின பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். முன்னதாக, புதுகை பூபாலம் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி ராஜா,திருப்பூர் பாராளுமன்ற உறுப்பினர் கே சுப்பாராயன் அவர்கள் மற்றும் தோழமை அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்றார்கள். நிகழ்ச்சியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சேலம் மாவட்டம் ஒருங்கிணைத்திருந்தது.

# திருப்பூரில் பயிலரங்கம்: பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் சிறப்புரை

திருப்பூர் மாநகர திராவிடர் விடுதலைக் கழக அமைப்பாளர் முத்து - வசந்தி இணையரின் மகன் வெற்றிமாறனின் இரண்டாமாண்டு பிறந்த நாள் விழா 07.01.2021 வெள்ளிக்கிழமை திருப்பூர் பொங்கு பாளையம் முத்துவின் இல்லமான பெரியார் இல்லத்தில் நடைபெற்றது.

காலை 11.00 மணியளவில் பிறந்த நாள் வாழ்த்து பாடல் ஒலிக்க வெற்றிமாறன் தனது பெற்றோர் உறவினர்களுடன் கேக் வெட்டினார். வெற்றிமாறனுக்கு பெற்றோர் மற்றும் உறவினர்கள் கேக் ஊட்டி தனது வாழ்த்தை மகிழ்வை தெரிவித்தனர். அதனை தொடர்ந்து வெற்றிமாறனின் பிறந்த நாளில் தோழர்கள் மற்றும் உறவினர்களுக்கு கொள்கையை கொண்டு சேர்க்கும் வகையில் 'விடுதலை'யின் குறியீடுகள் 'பெரியார் - அம்பேத்கர்' எனும் தலைப்பில் பயிலரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு மாவட்ட தலைவர் முகில்ராசு தலைமை வகித்தார். வருகை தந்தோரை முத்து வரவேற்று உரையாற்றினார். திருப்பூர் ராமசாமி மற்றும் தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் வாழ்த்துரைக்கு பின் கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் பயிலரங்கை நடத்தினார். நிறைவாக வசந்தி நன்றியுரையாற்றினார்.

நிகழ்விற்கு திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, மாவட்ட அமைப்பாளர் அகிலன், தனபால், மாதவன், அய்யப்பன், ராசிபுரம் திலீபன், சிரஞ்சீவி, ஈரோடு பிரபு, அய்யா சுந்தரம், யோகேஷ்வரி முத்துலட்சுமி, மணிமேகலை, சாரதி, சாலினி, கோத்தகிரி பாலு, திருப்பூர் யாழினி, யாழிசை மற்றும் கழகத் தோழர்கள் உறவினர்கள் கலந்து கொண்டனர் மதியம் பிரியாணியுடன் விருந்து மற்றும் தேனீர் ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வை மாநகர அமைப்பாளர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.250
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 13th January 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN